முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

**எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த**

**மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்**

**பிலவ வருடம் ஆனி மாதம் 06ம் திகதி முதல் ஆனி மாதம் 13ம் திகதி வரை**

**(20.06.2021 ஞாயிறு முதல் 27.06.2021 ஞாயிறு வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. பேரிடரில் தவிக்கும் மக்களுக்கு
புகலுவேன் அகத்திய மகரிஷியும்
ஆறுமுக அரங்க ஞானி கேட்க
அருளுவேன் இந்தியா தமிழகம்தன்னில்

2. தன்னிலே பிலவ மிதுன திங்கள்
தக்க சஷ்டி திகதி மேல் முன்னான்கோர் திகதிவரை
இன்னாளில் வருங்கால பலன்குறித்த
இயம்பிடுவேன் வார ஆசி விளக்கம் தன்னை

3. தன்னிலே ஞானிகள் தயவுபட
தமிழக ஆளுமை செயல்பாடு
அண்ணலாக மக்களை நோக்கி
ஆதரவாய் சேவையில் சிறக்க

4. சிறப்பாக தமிழக மக்களும்
செவிசாய்த்து கட்டுக்குள் வந்து
மறுப்பின்றி ஏற்று நடக்கவே
மரண அவலங்கள் இனி குறைந்து

5. குறைந்து நச்சுக்கிருமி வழி அல்லல்
குறிப்பாக விலகி பாதுகாப்பு கூடும்
நிறைவான தயவான சேவையாக
நிலமதனில் அனைத்து துறைகளும் மாற

6. மாறவே தமிழகத்தின் வளர்ச்சி
மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக
தேறவே ஏற்றம் தனை காணும்
தெரிவிப்பேன் இந்திய ஆளுமையும்

7. ஆளுமையும் சகிப்புத் தன்மைபட
அச்சுறுத்தும் நச்சுக்கிருமி இடர்வழி
வலுவான செயல்பாட்டை சலுகையாக
வாக்குறுதி மாறா சேவை செய்தால்தான்

8. தன்னிலே இந்தியாவில் மிஞ்சுகின்ற
தாமுரைப்பேன் உயிர்பலி குறையும்
இன்னலை கடந்து மக்களும்
இந்தியாவும் சடுதி மீள நேரும்

9. நேருமையான செயலை காலம்கடத்தா
நிலமதனில் தருமபடி சேவையை
வறுமை பிணி நீக்கும் வண்ணம்
வருங்கால காப்புநலன்குறித்து செய்தால்தான்

10. செய்தால்தான் இந்திய ஆளுமை
சிறப்பான வரவேற்பை உலகளவில்பெறும்
ஐயமற உலகநாடுகள் உதவிபட
ஐநா ஆதரவும் பெருகிட நேரும்

11. நேருமைபட சகல துறைகளிலும்
நிர்வாகம் வளர்ச்சி நோக்கி இயங்க
ஆறுமுக அரங்க ஞானி ஆசிக்குவர
ஆளுமைசிறந்து இந்தியாதமிழகம் தலைநிமிரும்

வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

பிலவ வருடம் ஆனி மாதம் 6ம் நாள் 20.06.2021 ஞாயிற்றுக்கிழமை முதல் ஆனி மாதம் 13ம் நாள் 27.06.2021 ஞாயிற்றுக்கிழமை முடிய நடக்கவிருக்கும் நிகழ்வுகள்.

இயற்கை பேரிடராய் உலகைப் பற்றியுள்ள நச்சுக்கிருமியினால் துன்புறும் உலக மக்களுக்கு பேரிடர் நீங்கிட அரங்கமகான் கேட்க அகத்திய மகரிஷியானும் அருள்செய்து இந்தியாவிலும் தமிழகத்திலும் பிலவ வருடம் ஆனி மாதம் 6ம் நாள் 20.06.2021 ஞாயிற்றுக்கிழமை முதல் ஆனி 13ம் நாள் 27.06.2021 ஞாயிற்றுக்கிழமை முடிய உள்ள காலத்தில் நடக்கவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

ஞானிகளின் தயவுடன் ஞானபூமியாம் தமிழகத்திலே தமிழகத்தின் ஆட்சியர்கள் ஞானிகள் தயவுடன் ஆட்சி புரிய மக்களுக்கு ஆதரவாய் செயல்பட்டு சேவையில் சிறந்து விளங்கிட அரசு கூறும் திட்டங்களுக்கு மக்களும் செவி சாய்த்து மறுப்பின்றி கட்டுப்பட்டு நடந்து வந்திட இனி தமிழகத்தில் மரண அவலங்கள் அதிகம் ஆகாமல் விரைந்து குறைந்திடும். நச்சுக்கிருமிகளால் உண்டாகின்ற துன்பங்களும் குறைந்து குறிப்பாக நச்சுக்கிருமி தாக்கம் குறைந்து நாட்டினில் இயற்கையாகவே பாதுகாப்பு பெருகிடும்.

அரசின் எல்லா துறைகளும் மக்கள் மீது தயவுடன் நடந்துவர தமிழகத்தின் வளர்ச்சியானது இந்தியாவின் மற்றய மாநிலங்களுக்கு வழிகாட்டியாக இருக்கும். தமிழகமும் நல்ல முன்னேற்றத்தினை காணும்.

இந்திய தேசத்தை ஆளும் அரசும் சகிப்புதன்மையுடன் செயல்பட்டு நச்சுக்கிருமிக்கு எதிராக தொடர்ந்து செயல்பட்டு வலுவான செயல்திட்டங்களை உருவாக்கி செயல்படுத்துவதோடு மக்களுக்கும் ஆதரவாய் சலுகைகளை அளித்து அரசு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றி சேவை மனப்பான்மையுடன் நடந்து கொண்டால்தான் இந்திய தேசம் முழுதும் உயிர்பலி எண்ணிக்கை குறையுமப்பா. மக்களும் தங்களுக்கு உண்டான நோய் துன்பங்களில் இருந்தும் வாழ்வாதார துன்பங்களில் இருந்தும் மீளமுடியும்.

நேர்மைமிக்க மக்களுக்கு உகந்த செயல்களை காலம் தாழ்த்தாமல் தருமத்தின் வழியில் விரைந்து செயல்பட்டு மக்களின் வறுமையையும் நோயையும் நீக்கும் விதமாக முனைப்புடன் செயல்பட்டால்தான் இந்திய தேசத்தின் ஆட்சியானது உலகளவில் சிறப்பான வரவேற்பை பெறும்.

மத்திய அரசு சிறப்புடன் செயல்பட உலக நாடுகளின் உதவிகளை பெற்று செயல்பட உலக நாடுகளின் உதவியும் ஐ.நா சபையின் ஆதரவும் பெருகி இந்திய தேசம் மேம்பாட்டினை காணும்.

ஆகவே இந்திய தேசத்தின் சகல துறைகளும் அதனதன் நிர்வாகங்கள் இடர்களையும் தாண்டி வளர்ச்சியை நோக்கி இயங்கிட தர்மத்தின் வழிசொல்லி நடத்திடும் சற்குரு அரங்க மகானின் ஆசியை பெற்று தர்ம வழி நடந்திட இந்திய தேசத்தின் ஆட்சியும் தமிழக ஆட்சியும் சீர்சிறப்பாய் உயர்வடையும் எனக்கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–